## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TITTAGUDI.

**CC.No.85–2023 L.W.2 P.W.3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.பிரசாந்த் | Father / Husband Name | சேதுராமன் |
| Village | கோழியூர் | Taluk | திட்டக்குடி |
| District | கடலூர் | Age | 33 |
| | | Time | 12.13 |

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, விதி முறைகளின் படி 25.09.2025 நாளாகிய இன்று திருமதி.B.ஹரிணி பிரியா பி.எ., எல்.எல்.பி., (Hons)., நீதித்துறை நடுவர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது. சாட்சி உண்மையாக சொல்கிறேன் என சத்திய பிரமாணம் செய்கிறார்.

**எதிரி ஆஜரில்லை, வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் கோழியூரில் வசித்து வெளிநாட்டில் வேலைக்கு சென்று தற்போது இந்தியாவிற்கு வந்துள்ளேன். இவ்வழக்கில் வாகன விபத்தில் இறந்த அஞ்சலை எனக்கு அண்ணி முறையாவார். எனக்கு அ.சா.1, அசா.2, பட்டியல் சாட்சிகள் 4 முதல் 11 ஆகியோரை தெரியும். கடந்த 11–02–2023 ம் தேதி மதியம் 12.45 மணியிருக்கும் அப்போது திட்டக்குடி பக்கம் மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக போன டிப்பர் லாரி யின்பதிவெண் TN-31-AL-3949 என்ற லாரியானது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி போன வலது பக்கமான போன என் அண்ணி அஞ்சலை மாடு ஓட்டிகிட்டு போனபோது கவனக்குறைவாக அந்த லாரி வந்து அடிப்பட்டுவிட்டாங்க. பின்னர் தகவல்அறிந்து அந்த பக்கம் வயலுக்கு போனேன் பின்னர் ஆம்புலன்ஸ்க்கு போன்செய்து அங்கு இருந்தவர்கள் உதவியோடு தனலெட்சுமி, சிவராமன், பாண்டியன், ரஞ்சித் இன்னும் கொஞ்சம் நபர்கள் அங்கு இருந்தார்கள் அவர்களுடன் திட்டக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் அங்கு அவருக்கு சிகிச்சை அளிப்பதற்கான உபகரணங்கள் இல்லை என்பதால் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிபாரிசு செய்தனர் 108 அங்கு இல்லாததால் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அங்குசென்றோம். அங்கு ஸ்கேன் எல்லாம் முடித்துவிட்டு மேலும் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு சிபாரிசு செய்தனர் அங்கும் 108 அங்கு இல்லாததால் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக அங்கு சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு அவர் வரும்வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பிறகு அங்கு மருத்துவர்கள்அஞ்சலையை போஸ்ட்மார்டன் ரிப்போர்ட் செய்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலிஸார் அந்த தகவலை மட்டும் கேட்டார்கள் என்ன நடந்தது என்று.

**கற்றறிந்த அரசுவழக்கறிஞர் சாட்சியை கண்ணுற்ற மற்றும் கேள்விப்பட்ட சாட்சி தனக்கு தெறிந்த சம்பவங்களை மறைத்து சாட்சியம் அளிப்பதால் பிறழ் சாட்சியாக பாவிக்க கோரினார்**

**கோரிக்கை ஏற்க்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சிய சட்டபிரிவு 154(1) ( பி.எஸ்.ஏ பிரிவு 157(1) ) ன் கீழ் குறுக்கு விசாரணை**

1. இச்சம்வமானது இறந்த அஞ்சலை திட்டக்குடியிலிருந்து விருத்தாசலம் செல்லும் மெயின் ரோட்டில் கோழியூர் பேருந்து நிலையம்அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இடது புறமாக சென்றார் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ? ஆமாம்.

2. மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியில் விபத்தை ஏற்படுத்திய லாரியின் முன்பக்க இடது பக்க டயரில் மாட்டி அடிப்பட்டு கிடந்தார் என கேள்விப்பட்டு அங்கு சென்று பார்த்தேன் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ? ஆமாம்.

3. சம்பவத்தை என்னுடைய பெரியப்பா விஷ்வநாதன் என்பவருக்கு சொன்னேன் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ? சரிதான்.

4. மேற்ச்சொன்ன 1 முதல் 3 வரையுள்ள சங்கதிகளை முதல் விசாரணையில் சொல்லாதற்கு காரணம் சமூகம் நீதிமன்றத்தில் பதற்றம் ஏற்பட்டதால்தான் சொல்லவில்லை என்று சொன்னால் ? சரிதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எம்.இ. பட்ட படிப்பு படித்துள்ளேன். நான் தற்போது சிங்கப்பூரில்வேலைபார்த்து வருகிறேன். சம்பவத்தின்போது விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்தேன். நான் போலிஸார் விசாரணையில் கூலிவேலைசெய்துவருகிறேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் ? என்னை கேட்டார்கள் நான் வயலில்வேலைசெய்கிறேன் என்று சொன்னேன்அவர்கள் என்ன நோட் செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் தற்போது பதற்றமாக உள்ளேனா என்றால் ? தற்போது பதற்றம் குறைந்துவிட்டது. போலிஸார் என்னை எப்போது விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் ? சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். மறுநாள் எப்போது எங்கு வைத்து விசாரித்தாகள் என்றால் ? சம்பவத்திற்கு மறுநாள் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் விசாரித்தார்கள். பேருந்து நிறுத்தத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ? 70 லிருந்து 100 மீட்டர் இருக்கும். பேருந்து நிறுத்தத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் இடையில் வளைவு உள்ளதா என்றால் ? வளைவில்தான் சம்பவம் நடந்தது. எனக்கு சம்பவத்தை யார் சொன்னது என்றால் ? நான்அப்போது அருகில் உள்ள வயலில் இருந்தேன் அடிப்பட்டது யார் என்று தெரியாது அருகில் சென்றவுடன் தான் என் அண்ணி என்று எனக்கு தெரியும். போலிஸார் விசாரணையில் சம்பவத்தை கேள்விப்பட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் ? சம்பவ இடத்தில் நான் இருந்தேன் எப்படி அவ்வாறு நோட் பன்னினாங்க தெரியவில்லை. போலிஸார் என்னை விசாரிக்கும்போது கையால்

எழுதிக்கொண்டார்காள அல்லது தட்டச்சு செய்தார்களா என்றால் ? கையால் எழுதிக்கொண்டார்கள். இறந்துபோனவர் என்னுடைய உறவினர் என்பதால் நான் சம்பவ இடத்தில் இல்லாமல் சம்பவத்தை கேள்விப்பட்டும் செல்லாமல் போலிஸார் கேட்டுக்கொண்டதற்கிணங்க என்னுடைய உறவினருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. நான் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவருவதால் நான் திடமான மனநிலையில்தான் உள்ளேன். முதல் விசாரணையில் பதற்றமாக உள்ளது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. எதிரிக்கும் இச்சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்றால் ? சரியல்ல.

**TYPED TO MYDICTATION OPENCOURT**
**INPRESENCE OF ACCUSED READOVER**
**TO THE DEPONENT AND ADMITTED BY**
**HIM/HER TO BE CORRECT**

**JUDICIAL MAGISTRATE,**
TITTAGUDI